குழந்தையினைக் கண்டு, அக்குமரனின் தாயாரிடம் சென்று செய்தியைத் தெரிவித்தாள். செய்திகேட்டு வருத்தத்துடன் நீர்மல்கு கண்ணினளாய் பிருத்விதேவி உடனே நாக வாபிக்குச் சென்று. ஆழமான அந்தக் குளத்தில் நாகங் களுடன் தனது குழந்தை விளையாடுவது கண்டு, தானும் அந்த வாபியில் குதித்துவிடுகிறாள். குழந்தையின் மகிமை யால் வாபியிலுள்ள நீர் முழங்காலளவாகக் குறைந்து விட்டது. இவ்வாறான பரபரப்பொலி கேட்டு அரசனும் அங்கே வந்து சேர்ந்தான். நாகவாபியினுள் விழுந்த குமாரனை நாகங்கள் தலையில் தரித்ததால் அக்குமரன் "நாககுமாரன்" எனப்பெயரிடப்பெற்று, ஐந்து வயது நெருங்கியவுடன் அவனைக் கல்வி கற்பதின் பொருட்டு ஜினேச்வரரிடம் ஒப்படைக்கப்பட்டான். நாககுமாரனும் கணிதம், சோதிடம் போன்ற சாஸ்த்திரங்களை எளிதில் கற்றுத் தேர்ந்தான். இப்படியிருக்கும்போது ஒருநாள் பஞ்சசுகந்தினி என்பவள் அரசவையை அடைந்து, "கின்னரி மனோகரி ஆகிய எனது இரு புதல்விகள் வீணை வாசிப்ப தில் வல்லவர்களாய் உடல் வனப்போடும் வாலிபத்தால் செருக்கும் அடைந்துள்ளனர். இந்த இருவருள் திறமை மிக்க ஒருவளை யார் கண்டுபிடிக்கின்றாரோ அவருக்கு இவ்விருவரையும் மணமுடித்து வைப்பேன்" என்று கூறினாள்.

அரசனும் நாககுமாரனை நியமிக்க, கின்னரி மனோகரி இருவரும் வீணை வாசித்தனர். வீணை வாசிக்கும்போது "இளையவள்தான் இருவருள் திறமை வாய்ந்தவள்" என்பதைப் பெரியவள் தரையைப் பார்த்தவாறே வாசிப்பது கொண்டு கண்டுபிடித்துக் கூறினான் நாககுமாரன். பிறகு பஞ்சசுகந்தினியும் புதல்வியரின் எண்ணத்தையும் கேட்டு அறிந்தவளாய் அவர்களை முறைப்படி நாககுமாரனுக்கு மணம் செய்துவைத்தாள்.

பிறிதொரு சமயம் மதம் பிடித்த யானையொன்று ஊராரைத் துன்புறுத்துவதாய் யாரோ ஒருவரால் ஆஸ்தானத்திற்கு வந்து அரசனிடம் தெரிவிக்கப்பெற்றது. அரசனும் அந்த யானையினை அடக்க ஸ்ரீதரனை அனுப்பினான். அவனால் யானையை அடக்க முடியவில்லை. முயற்சி பயனின்றியே ஸ்ரீதரன் திரும்பிவிட்டான். பின்னர் யானையினை அடக்க நாககுமாரன் பணிக்கப்பெற்றான் அவன் கஜபந்தன சாஸ்திரம் அறிந்தவனாகையால் முறைப்படி யானையை வசப்படுத்தி அதனை அரசனிடம் ஒப்படைக்கச் சென்றான். அரசனும் அதைப் பரிசிலாய் நாககுமாரனுக்கே அளிக்க அவனும் அதன் மீதேறி இல்லம் திரும்பினான்.

அதைப் போலவே அட்டகாசம் புரியும் துஷ்டாச்வம் என்ற குதிரையினையும் அடக்கி, பரிசிலாகப்பெற்று மகிழ்ந்தான் நாககுமாரன், இவ்வாறிருக்கும் தருணத்தில் விசாலநேத்திரை தன் மகனான ஸ்ரீதரனிடம் "நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்றவளாய் அவனுக்குத் துணையாய் ஸஹஸ்ரபடர் எனப்படும் 500 நபர்களை இருக்கச் செய்தாள். மற்றொரு நாள் நாககுமாரன் உத்யான வனத்திலுள்ள தடாகத்தில் ஜலக்ரீடை செய்யப் புறப்பட்டான். அவனுடைய தாய் ப்ருத்வீதேவியும் ஆடையலங்காரத்துடன் அங்கு செல்ல அதனை ராஜ பவனத்திலிருந்து (பவனத்தின் மீதிருந்து) விசாலநேத்திரை கண்டு, உடனிருந்த ஜயந்தர மன்னனிடம், "பாருங்கள் அரசே! உமது ஆசைநாயகி யாரிடமோ கள்ளத் தொடர்பு கொண்டு காதலனுடன் செல்லுகிறாள் போலும்" என்று தெரிவித்தாள். அரசனும் விசாலநேத்திரையின் சொல்லைக் கேட்டுத் திகைப்படைந்தான். ஆனால் ... ஜலக்ரீடையினை முடித்துத் திரும்ப நினைத்த நாககுமாரன்,

வேஷபூஷாதிகளை அணிந்து தன் தாயாரை வணங்கினான், பிறகு அவனுடன் வீடு திரும்பியவளாய் பிருத்வீ தேவி இன்பமாய் இருந்தாள். அதை நோக்கிய மன்னன் விசால நேத்திரையைக் கடுமையாகக் கடிந்துகொண்டான்.

பிறகு பிருத்விதேவியின் இருப்பிடத்தை மன்னன் அடைந்து, "எங்கு சென்றாய்?" என்று வினவ. அவளும், "குமாரனுடன் ஜலக்ரீடைக்குச் சென்றேன்" என பதில் அளித்தாள். அதைக்கேட்ட ஜயந்தரனும் ஸ்ரீதரனை விளங்கச்செய்யவேணும் என்றெண்ணத்தில் நாககுமாரனை வெளியில் அழைத்துச்சென்று விளையாடவேண்டாம்" என்றுகூறிச் சென்றுள்ளார் என்பதை அறிந்து, அவள் மிகவும் துயரடைந்தாள். நாககுமாரனும் எங்கோ சென்று வீடு திரும்பி, செய்தியைத் தெரிந்துகொண்டான். இருப்பினும் அவன் அரசனின் கட்டளையை ஏற்காது நீலகிரி யானைமீதேறி சங்கம். காகளம் போன்ற வாத்யங்கள் முழங்க பரிஜனங்களுடன் நகர்வலம் வந்தான். அரசனும் கோலாஹலத்துடன் வருவது யாரெனக் கேட்டவனாய் அருகிலுள்ளவர் நாககுமாரனென மறுமொழிகூற. உடன் பிருத்விதேவியை அணுகி என்னுடைய கட்டளையை மதிக்காமல் நீ ஏன் வெளியே அனுப்பினாய் என்று வினவியவனாய் அவளிடமிருந்து அனைத்துச் செல்வங்களையும் சேகரித்துக் கருவூலத்தில் வைத்தான். அதையறிந்த நாககுமாரனும் சூதாட்டம் விளையாடி சபையோர் அனைவரையும் அதில் வென்று அவர்களின் செல்வத்தைக் கைப்பற்றினான். அரசனும் அவையில் இருப்பவர்கள் அணிகலன்கள் இன்றியவராய் வருகைபுரிதல் கண்டு அவர்களிடம் "ஆபரணங்களை இழக்குமளவிற்கு என்ன நடந்தது?" என்று வினவினான். அதற்கு அவர்கள்

"நாககுமாரனுடன் சூதாட்டம் விளையாடி, அதில் தோற்று, அதன் விளைவாய் 8000 ரூபாய்கள் பொறுமான முள்ள அணிகலன்களை இழந்து நிற்கிறோம்" என்று கூறினர்.

ஜயந்திரன் உடனே நாககுமாரனைத் தன்னுடன் சூதாட்டம் ஆட அழைத்தான். அரசனையும் சூதாட்டத் தில் தோற்கடித்த நாககுமாரன் அவனது விண்ணப்பத் தினை ஏற்று சூதாட்டத்தில் மற்றவர்களிடம் இருந்து பெற்ற செல்வங்களை அவர்களிடம் அளித்தான். தாயின் செல்வங்களை அவளிடத்தில் அளித்து பிருத்வீ தேவியை மீண்டும் மகிழ்ச்சியிலாழ்த்தினான் நாககுமாரன். ஜயந்தரனும் நாககுமாரனுக்கென அழகிய ஒரு நகரையே நிர்மாணம் செய்து கொடுத்தான். நாககுமாரனும் தன் மனைவியருடன் அதில் மகிழ்ச்சியாய்க் காலங்கடத்தினான்,

இத்துடன் உபயபாஷா கவிச்சக்ரவர்த்தி
ஸ்ரீமல்லிஷேணசூரியால் இயற்றப்பெற்ற நாககுமார
பஞ்சமீ கதையில் இரண்டாம் சர்கம் முற்றுபெற்றது

மூன்றாம் ஸர்கம்

உத்தரமதுரையை தலைநகராகக்கொண்ட சூரஸேனம் என்ற நாட்டை ஜயவர்மன் என்னுமோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவி ஜயாவதி. அவர்களுக்கு வியாளன் மாவியாளன் என்று இரு புதல்வர்களிருந்தனர். ஒருநாள் சூரஸேனத்திற்கு "யமதரர்" என்னும் முனிவர் வந்தார். அவரை ஜயவர்மன் தன் புதல்வர்களுடன் சென்று வணங்கி, அறச் சொற்பொழிவையும் கேட்டு, "என் புதல்வர் இருவரும் கோடிக்கணக்கான வீரர்களை எதிர்த்துப் போரிட வல்லவர்கள், ஆதலால் "கோடிபடர்" என்றழைக்கப் பெறுகின்றனர். இருப்பினும் இவர்கள் இங்கிருந்தே அரசாட்சி புரிவார்களா? பிறருக்கு பணி அடிமை செய்து வாழ்வார்களா? என்று அவரிடம் கேட்டான். அதற்கு யமதர முனிவர், "அரசே! வியாள னுடைய நெற்றியில் காணப்படும் கண் எந்த நபரைக் கண்டவுடன் பார்வை இன்றியதாய் அழிகின்றதோ அந்த நபரே வியாளனுக்கு ஸ்வாமி ஆவார். அவரையே வியாளனும் அடிபணிந்து ஸேவை செய்வான். அழகிற் சிறந்து விளங்கும் மாவியாளனை எந்த ஒரு பெண்மணி இவனை அழகற்றவன் என்று கூறுவாளோ அவளுடைய கணவனே மாவியாளனுக்கு ஸ்வாமி. ஆகவே மாவியாளனும் அந்த பெண்மணியின் கணவனை அடி பணிந்து ஸேவை செய்வான்" என்று கூறினார்.

ஜயவர்மனும் வியாளனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டுத் தவம்புரியச் சென்றான். வியாள மாவியாளர் களும் அந்த இராஜ்யத்தை மந்திரியான துஷ்டவாக்கி யனிடம் ஒப்படைத்துவிட்டுத் தத்தம் ஸ்வாமிகளைத் தேடுவதில் ஈடுபட்டவர்களாகப் பாடலிபுத்ரத்தை அடைந்தனர். அங்கு அரசாட்சி புரிபவன் ஸ்ரீவர்மா என்பவன். அவனது மனைவி ஸ்ரீமதி. அவர்களது புதல்வி

கணிகை சுந்தரி என்பவள். ஒரு சமயம் திரிபுரை (கணிகை சுந்தரியின் தோழி. ஸ்ரீபஞ்சமீ நோன்புக் கதையில் — மல்லிஷேணர் — பணிகுமாரகதா ஸாஹித்யத்தில் பக்க எண். 30) என்பவள் கடைத்தெருவில் இரண்டு வாலிபர்களைத் தான் கண்டதாகவும், அவர்களுள் ஒருவருடைய நெற்றியிலே கண் ஒன்று இருப்பதாகவும், மற்றொருவர் அழகில் மன்மதனைத் தோற்கச் செய்வார், என்றும் அவர்களைப் பற்றி வருணித்தாள். செய்தியறிந்த கணிகை சுந்தரியும் மாடியிலுள்ள சாலேகத்தின் (கவாக்ஷமென்னும் வட்டமான துவாரத்தின்) வழியே மாவியாளனைக் கண்டு மோஹித்து மன்மத பாணங்களால் துளைக்கலுற்றாள். அரசனாகிற ஸ்ரீவர்மனும மகிழ்ச்சி பொங்க மாவியாளனுக்குத் தன் புதல்வியையும், வியாளனுக்கு தாதியின் பெண்ணான லலிதசுந்தரியைக் கொடுத்து மணமுடித்து வைத்தான்..

இதற்குள் விஜயாதிபுரத்திலிருந்து ஜிதசத்ரு என்ற அரசன், கன்னிகையின் பொருட்டு பாடலிபுத்ரத்தை முற்றுகையிட்டான். ஜிதசத்ருவின் படைபலத்தைப் பார்த்து வியாளன் தனிமையான ஓர் அறையில் மாவியாளனிடம், "நம்மிடமிருந்து யாதொரு பயனையும் எதிர்பாராமல் நமக்கு உதவிபுரிந்திருக்கிறான் ஸ்ரீவர்மன். அவனுக்கு ஆபத்து நேர்ந்துள்ள இந்தத் தருணத்தில் நாம் அவனுக்கு உதவிபுரிந்தே ஆகவேண்டும். என்ன செய்வோம்? ஆதலால் நீ சென்று அவனுக்குத் தக்க பாடம் போதித்து வா! அதை அவன் ஏற்காவிடில் முறைப்படி அவனைத் தண்டிப்போம்" என்றான். உடனே மாவியாளன் ஜினவைரிகளின் ஸதஸ்ஸில் சென்று ஸ்ரீவர்மபூபாலனால் எது சொல்லி அனுப்பப்பெற்றதோ அதைக் கூறுகிறேன் கேளுங்கள், "ஓ! ஜிதசத்ருவே! நீ இன்றிரவே விரைவாய்க் கிளம்பி உன் இருப்பிடம் சென்று சேர்ந்தாயாகில் பிழைத்தாய். இல்லையெனில் யமாலயம் அனுப்பப்படுவாய்" என்றான்

மாலியாளன். அதைக்கேட்ட ஜிதசத்ருவும் கோபத்தால் பொங்கி எழ, மாலியாளனும் அவரைக் கச்சையால் கட்டி வியாளன முன்னிலையில் நிறுத்தினான். வியாளனும் அவரை ஸ்ரீவர்மனிடம் ஒப்படைக்க, ஸ்ரீவர்மன் ஜிதசத்ருவை சிறையில் அடைத்தான்.

பிறகு வியாளன் தான் அங்கிருந்து கிளம்ப இருப்பதை மாலியாளனிடம் தெரிவித்துவிட்டு பாடலிபுத்திரத்திலிருந்து கிளம்பி கனகபத்தனத்தைச் சென்றடைந்தான். அங்கிருந்து வெளியே சென்று வந்த குமாரனை வியாவன் காண குமாரனின் பார்வை [ஆநெயநேரி பரிஜன ஸமாவிதனாகி பர்வனம் கண்டு ஸமீபக்கே போபா களாதன திருஷ்டி — ஆனை மீதேறி பரிஜனங்களுடன் வருவது கண்டு அருகில் போகும்போது அவனது பார்வை (மல்லிஷேணன் இயற்றிய ஸ்ரீபஞ்சமீ நோன்புக் கதை) — பணிகுமாரகதா ஸாஹித்யத்தில் ப. எண். 30] வியாளனின் நெற்றிக்கண் மீது விழ்ந்ததால் நெற்றிக்கண் மாயமாய் மறைந்தது. பிறகு மறைந்த நெற்றிக்கண் விஷயத்தை மற்றவர்களால் அறிந்து, தன் கைகளால் தடவிப் பார்த்தும் முன்பொருகால் கூறக் கேட்ட முனிவரின் கூற்றை நினைவுகூர்ந்தவனுமான வியாளன் நாககுமாரனிடம், ''தங்களின் பாதஸேவனத்தைப் புரிய எண்ணுகிறேன்'' என்று தனது விழைவை வெளிப்படுத்தினான். அதற்கு நாககுமாரன் இசைவளிக்க, வியாளனும் நாககுமாரனுடைய ஊருக்குச் செல்லுகின்றான். தன் ஊரை அடைந்த நாககுமாரன் தன் வீட்டு வாயிலிலேயே வியாளனை விட்டுவிட்டு வீட்டினுள் சென்றான்.

அதுசமயம் ஸ்ரீதரனின் வாயிற்காப்பாளர்கள் ஆயுதம் ஏந்தியவர்களாய் எதிர்வர, அவர்களிடம் ''நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்'' என்று வியாளன் கேட்டான். அதற்கு அவர்கள், ''நாங்கள் 'ஸஹஸ்ரபடர்' என்றழைக்கப்பெறும்

ஸ்ரீதரனின் பணியாளர்களுள் 500 நபர்களும், நாக குமாரனைக் கொல்ல வந்திருப்பவர்களும் ஆவோம்" என்றனர். உடனே சினமடைந்த வியாளன் யானை கட்டும் தம்பத்தால் அவர்களை அடித்துக்கொன்றான். அந்த கோலாகல ஒலியினைக்கேட்டு நாககுமாரன் வெளியே வந்து, வியாளனின் செய்கையைக் குறித்துப் புகழ்ந்து சிறிது நேரம் அங்கே நின்றான். அப்போழ்து ஸ்ரீதரன் தனது சிப்பாய்கள் மாண்ட செய்திகேட்டு, நாககுமாரனுடன் போர்புரிய வந்தான். நாககுமாரனும் 'நீலகிரி' எனப்படும் யானை மீதேறி போரிட ஆயத்தம ஆனான். நாககுமாரனுக்கும் ஸ்ரீதரனுக்கும் தந்தையான ஜயந்தரன் அவனுடைய புதல்வர்களிருவருக்கும் நடைபெற உள்ள போரினை நிறுத்துமாறு தனது அமைச்சனான நயந்தரனை அங்கே அனுப்பிவைத்தான். நயந்தரனும் அரச புத்திரர்களை அணுகி "உங்களிருவரில் யாரேனும் ஒருவர் இந்நகரைவிட்டு வெளியேறவேண்டும். இல்லையெனில் ஸ்ரீதரன் வீணாக மாள்வது உறுதி" என்றும், மறுபடியும் நாககுமாரனிடத்தில், "நீவிர் அனைத்துமறிவீர். ஆதலால் சண்டை ஏற்படாவண்ணம் எது உசிதமோ அதைச் செய்யுங்கள்" என்று ஜயந்தரனின் விருப்பத்தைத் தெரிவித்தான்.

அதைக் கேட்ட நாககுமாரன் தன் தாயாரான பிருத்வீ தேவியிடம் செய்தியைத் தெரிவித்து அவரை வணங்கிப் பிறகு மனைவியுடன் நீலபர்வதமெனும் யானை மீதேறி அந்நகரைவிட்டு வெளியேறினான்,

நகரைவிட்டு வெளியேறிய நாககுமாரன் உத்தர மதுரையை அடைந்து தேவதத்தையின் வீட்டில் வசித்து வந்தான். அப்படியிருக்க ஓர் நாள் நகரைச் சுற்றிப்பார்க்கச் செல்லும் நாககுமாரனிடம் தேவதத்தை, "கான்யகுப்ஜத்தின் அரசன் ஜயவர்மன். அவன் மனைவி

குணவதி. அவர்களின் மகள் சுசிலை. சுசீலையைச் சிம்மபுர மன்னன் ஹரிவர்மனுக்கு மணம் முடிக்கவேண்டுமென்று அவரது பெற்றோர்களின் விருப்பம். இப்படியிருக்க துஷ்டவாக்கியன் சுசிலையை மணக்க எண்ணி, அவளைக் கடைத்தெருவின் ஓரிடத்தில் அடைத்துவைத்துள்ளான். துஷ்டவாக்கியனை மணக்க விரும்பாத சுசீலை தினமும் கதறி அழுதுகொண்டிருக்கிறாள். அதைக்கேட்டஞ்சாமல் உன்னுடைய செயலை மேற்கொள்'' என்று கூறினாள். அதைக்கேட்ட நாககுமாரன் சுசீலையைத் தேற்றி அங்கு இருந்த காவலர்களைக் கொன்று, தன்னுடைய காவலர் களைக் காவல்புரியச் செய்தான். செய்தியறிந்த துஷ்ட வாக்கியன், நாககுமாரனுடன் போரிட்டான். அப்போது நிலகிரி யானையை நீர்குடிக்கச் செய்த வியாளன், அங்கு ஏற்பட்ட கோலாகல த்வனியையும், யாரோ ஒருவர் தன்னைக் குறித்துத் தன் பெயர்கூறிப் பேசுதலையும் அறிந்து, துஷ்டவாக்கியனின் எதிரில் வந்தான். துஷ்ட வாக்கியன் தன் பிரபுவான வியாளன் எதிர்வரக்கண்டு, வணங்கித் தன்னை மன்னித்துவிடக் கோரினான்.

பிறகு வியாளன், துஷ்டவாக்கியனை நாககுமாரனிடம் அறிமுகம் செய்துவைத்து அவனுடைய கதையையும் நாக குமாரனுக்கு விளக்கினான். அதன் பேரில் நாககுமாரன் கான்குப்ஜாதிபதியின் மகளை விடுவிக்கச் செய்து ஹரிவர்ம னுக்கு மணம் முடிப்பித்தான்.

பின்னர் ஒருநாள் நகர்ப்புறத்தில் சிலர் வீணைகளுடன் வருவதுகண்டு நாககுமாரன் அவர்களை அழைத்து "வீணையும் கையுமாக நீங்கள் எங்கே சென்றுகொண்டு இருக்கிறீர்கள்'' என்று வினவினான். அதற்கு "சுப்பிர-திஷ்ட்டம்'' என்ற பட்டணத்தை ஆட்சிபுரியும் சகன் வினயவதி தம்பதியரின் புதல்வனான கீர்த்திவர்மன்,

"காஷ்மீரப்பட்டணத்தை நந்தன் என்னும் அரசன் ஆட்சி புரிகின்றான். அவன் மனைவி தாரணி என்பவள். அந்த தம்பதியருக்கு மகளாய்த் தோன்றியவள் திரிபுவனரதி. அவள் வீணை வாசிப்பதில் திறமை வாய்ந்தவள். அவளுடன் போட்டியிட்டு அதில் தோற்றுத் திரும்பு கின்றோம்" என்று பதிலளித்தார் கீர்த்திவர்மனின் வார்த்தையைக் கேட்ட சில தினங்களில் நாககுமாரன் காஷ்மிரத்தை அடைய அங்கு நந்தன், நாககுமாரனை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தன் நகருக்குள் நுழையச் செய்தான்.

பின்னர் நாககுமாரன் வீணா வாத்யத்தினால் திரிபுவனரதியை ஜயித்து, அவளை மணந்து சுகத்தோடு காலங்கடத்தி வந்தான். அப்படியிருக்க ஒருநாள் வணிக னொருவனைக்கண்டு பூவுலகம் தோறும் சுற்றுகின்ற உன்னால் ஏதாவது வியப்புடைய காட்சி காணப் பெற்றதா"? என்று வினவினான் நாககுமாரன். அதற்கு வணிகன், "இரம்யக கானனத்தில் பூமிதிலகம் என்ற ஒரு தேவாலயமுள்ளது. அவ்வாலயத்தின் முன்பு மதியம் தினந்தோறும் ஒருவன் ஓலமிடுகிறான்" என்று கூறினான்.

நந்தனின் குமாரத்தியை தரித்த (மணந்த)வனாய் காச்மீரத்திலிருந்து கிளம்பிய நாககுமாரன் ரம்ய-காரண்யத்தை அடைந்து, ஜினாலயம் சென்றான். அங்கு ஜினரை பூசித்து வணங்கும் போது, மதியம் வழக்கம் போல் தேவாலயத்தின் முன்பொருவன் ஓலமிட, அவனது ஒலி கேட்டு அவனை அழைத்து, "நீ எதற்காக இவ்வாறு ஓல மிடுகிறாய்" என்று வினவ, அதற்கு அவன், "இந்த ரம்யக வனத்தில் வாசம் புரியும் ரம்யகன் என்ற வேடன் நான். என்னுடைய மனைவியை பீமனெனும் ஓர் அசுரன் பலாத்காரமாகக் கவர்ந்து சென்று சிறை வைத்துள்ளான்."

என்று கூறினான். அதைக் கேட்ட நாககுமாரன், "அந்த குகையை எனக்குக் காட்டுவாயாக" என்றான். அதைக் கேட்ட ரம்யகனால் தூரத்திலிருந்தே அக்குகை நாககுமாரனுக்குக் காண்பிக்கப்பெற்றது. பிறகு நாககுமாரன் தான் ஒருவனாய் அங்கே செல்ல, அவனைக் கண்ட பீமாசுரன் நாககுமாரனை வணங்கி, "ஸ்வாமி தங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கட்டளையிடுங்கள், செய்யக் காத்திருக்கிறேன்" என்றான். அதைக் கேட்ட நாககுமாரன், "ரம்யகனின் மனைவியை விரைவில் அவனிடம் ஒப்படைப்பாயாக" என்றான்.

உடனே பீமாசுரனும் விரைவாக அவளை அழைத்து வந்து நாககுமாரன் முன்னிலையில் நிறுத்தினான். அப்போதே அவனால் பயத்துடன் சந்திரஹாஸம் என்னும் வாளும், (நாக)சயனமும், காமகரண்டகம் என்னும் நிதிப் பெட்டியும்* சமர்ப்பிக்கப்பெற்றன. பிறகு நாககுமாரன் அங்கிருந்து கிளம்பி ரம்யகனை அடைந்து வேறென்ன விசேஷமுள்ளதென விசாரிக்க அதற்குப் பதிலாக அவனால் தூரத்திலிருந்த சொர்ணகுகை காண்பிக்கப் பெற்றது. அங்கு பிரவேசித்த நாககுமாரனை வாயிற்காப்பாளி சொர்ணகும்ப நீரால் கால் கழுவி வணங்கி வரவேற்றாள். பிறகு "4000 தேவியர்களை நான் தாங்களின் பொருட்டு காப்பாற்றி வைத்துள்ளேன. அவர்களை ஏற்றுக் கொள்வீராக" என்றுகூற, நாககுமாரனும், "இவர்களை இங்கே ஏன் வைத்துள்ளீர்கள்" என்று கேட்க, அதற்கு ஸுதர்சனாதேவி என்னும் வாயிற்காப்பாளி கூறினாள்.

---

* चन्द्रहासोऽसिर्नागशय्या निधिः कामकरण्डकः ।

(पुण्यास्रवकथाकोशः - फणिकुमारकथासाहित्ये कन्नड - पृ. सं. 55)

"ரூப்யாத்ரியின் தென் வரிசையில் (திக்கில்) உள்ள "அளகை" என்னும் பட்டணத்தை வித்யுத்பிரபன் என்னும் வித்யாதரன் ஆண்டுவந்தான். அவன் மனைவி விமலப் பிரபை தம்பதியரின் புதல்வனாய்த் தோன்றியவன் ஜிதசத்ரு. அவன் ஜப ஹோமாதிகளை பன்னிரண்டு வருடகாலம் மேற்கொண்டு ஆகாசகாமினி முதலான 4000 வித்யைகள் ஸித்திக்கப் (கைவரப்) பெற்றான். அதே நாளில் ஸித்தவிவர குகைக்கு முனிசுவ்ரதர் என்ற பட்டாரகர் வந்திருப்பதை அறிந்து அவரை வணங்க பேரி முதலான வாத்யம் முழங்க தேவர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். தேவலோகத்து வாத்ய ஒலிகள் கேட்பதற் கான காரணத்தை அறிந்துவர அங்கே அவலோகினி என்னும் வித்யாதரப் பெண்மணியை அனுப்பினான் ஜித சத்ரு. அவளும் அங்கு சென்று செய்தியை மன்னனிடம் கூற, ஜிதசத்ருவும் முனிசுவ்ரதர் எனனும் பட்டாரகரை வணங்கச் சென்றான்,

முனிசுவ்ரதரைப்பூசித்து வணங்கிய மன்னன் அவரிடம் தவம் மேற்கொள்ளத் தமக்கிருந்த ஆவலைத் தெரிவித்து அனுமதி கோரினான். அப்போது நாங்கள், "கஷ்டப்பட்டு எங்களை சாதனை புரிந்து அதன் பயனையும் அனுபவித்த பிறகு தவத்தை மேற்கொள்வாயாக" என்றும், "எங்க ளுடைய சொல்லைக் கேட்காமல் தவமேற்பாயாகில் நாங்கள் யாருக்குச் சேவை செய்வோம் என்றுகூறிப் பின் தவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றும் கூறினோம். அதற்கு ஜிதசத்ருவும் ஜினமுனிவரைக் கேட்டு, "நீங்கள் நாககுமாரன் என்பவர் இங்கு வரும்போது அவரை அடிபணிந்து சேவை புரியுங்கள்" என்று பதிலளித்தார். "ஆதலால் நாங்களும் ஸ்ரீநேமிதீர்த்தரின் புண்ய தினத்தில் கூடியுள்ளோம்" என்று கூறினர். உடனே நாககுமாரன், "நீங்கள் எனக்கு எப்போது தேவைப்படுகிறீர்களோ அப்போது உங்களை நான் அழைத்துக் கொள்கிறேன்.

அதுவரை நீங்கள் அனைவரும் இங்கேயே இருங்கள்'' என்று கூறி அங்கிருந்து கிளம்பினான் நாககுமாரன். வேடனை அடைந்து மற்றேதும் ஆச்சர்யம் உண்டோ? என்று வினவ, அதற்கு அவன், ''இந்த ஆலயத்தின் வடக்கு திசையில் பயங்கரமான வேதாளம் ஒன்றிருக்கிறது'' என்று சொன்னான். உடனே நாககுமாரன் அங்குசென்று வேதாளத்தின் கால்களை வெட்டி வீழ்த்தினான். அங்கு இருந்த சாஸனத்தில், "யார் வேதாளத்தை வெட்டி விழ்த்துகிறாரோ அவரே இந்த ரத்னநிதிக்கு அதிபதி" என்று எழுதப்பட்டிருப்பதை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தவனாய் அந்நிதிக்குக் காவலையும் ஏற்படுத்திவிட்டு [அங்கிருந்து கிளம்பி மறுபடியும் ''ஆச்சரியம் ஏதேனும் உண்டா? இல்லையா?'' என்று நாககுமாரன் கேழ்க்க, 'ஏதுமில்லை' என வேடனின் மறுமொழி கேட்டு, ஜினரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டான். — புண்யாச்ரவகதா கோசம் — பணிகுமாரகதா ஸாஹித்யத்தில் ப. எண். 56] தொலைவிலுள்ள ஒரு ஜினாலயத்தைக் கண்டு மனைவியருடன் நாககுமாரனும் வியாளனும் செல்லுகின்றனர். அங்கே பன்னிரு சூரியர்களின் ஒளிக்கொப்பாகத் திகழும் ஜினதேவரை வணங்கி, அந்த இரம்யக வனத்திலிருந்து புறப்பட்டு கிரிகூடபுரம் சென்றான்.

அங்கு ஓர் ஆலமரம் கண்டு அதனடியில் அமர்ந்தான். அப்போது அம்மரத்தின் விழுதுகள் மரத்தைவிட்டுக் கிளம்பின. மிகவும் எளிதாக அவற்றை ஒன்றுசேர்த்து ஊஞ்சலாகச் செய்து ஊசலாட்டம் புரிந்தான். அவ்வாறு ஊசலாட்டம் புரிந்தவரை யார் என்றறிய [அப்போது ஆலமரக் காப்பாளன் வந்து நாககுமாரனை வணங்கிக் கூறினான். "ஸ்வாமின்! இங்கு கிரிகூட நகராதிபதியான வனராஜ — வனமாலைக்கும் பிறந்தவளான லக்ஷ்மீமதி

என்பவள் மிக்க அழகு வாய்ந்தவளாய்த் திகழ்ந்தாள். அங்கு ஒரு சமயம் 'அவதிபோதர்' என்னும் முனிவர் வருகை தந்தார். அவரிடம் அரசனால் 'லக்ஷ்மீமதிக்கு கணவன் யாராகக் கூடும்?' என்று கேட்கப்பெற்றது. அதற்கு அந்த முனிவர், 'யாரது தரிசனத்தால் இந்த தேசத்திலுள்ள ஆலமரத்தினுடைய விழுதுகள் மரத்தி லிருந்து கிளம்புகின்றனவோ அவரே இவளது கணவர் ஆவார்' என்று கூறினார். அப்படிப்பட்ட மனிதர் யார் எனக் கண்டுபிடிப்பதன் பொருட்டு அரசனால் இங்கே நான் நியமிக்கப்பட்டுள்ளேன்" என்று கூறியவனாய்ப் பிறகு தன் யஜமானனிடம் சென்று செய்தியைத் தெரிவித்தான். (புண்யாச்ரவகதாகோசம் - பணிகுமார கதா ஸாஹித்யத்தில் ப. எண். 57) கிரிகூடபுர மன்னன் வனராஜன் அங்கே சென்றான். அவனது மனைவி வனமாலை. அந்த தம்பதியரின் மகள் லக்ஷ்மீமதி வனராஜன் ஆலமர விழுதினை ஊஞ்சலாய்ச் செய்து விளையாடிய நாககுமாரனைத தன் நகருக்கு அழைத்துச் சென்று, மகளான லக்ஷ்மீமதியை நாககுமாரனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

அந்நகரத்தில் ஒரு சமயம் நாககுமாரன், ஜயர், விஜயர் என்னும் இரு முனிவர்களைக் கண்டான். அவர்களை வணங்கியவனான நாககுமாரன், "இந்த வனராஜன் யார் என்பதில் சந்தேஹம் உள்ளது" என்று முனிவர்களிடம் தெரிவித்தான். அதற்கு ஜயர் என்னும் முனிவர், "இந்த வனராஜனின் பங்காளியான ஸோமப்ரபன் புண்ட்ரவர்தன புரத்தை ஆண்டு வருகிறான். முன்பொருகால் வனராஜனின் பாட்டனார் ஸோமப்ரபனின் பாட்டனாரால் துரத்தப்பெற்றான். ஆகையால் வனராஜன், அரசாள வேண்டிய புண்ட்ரவர்தனபுரத்தையன்றி கிரிகூடபுரத்தில்

ஆட்சி செலுத்துகிறான்'' என்று கூறினார். இவ்வாறு வனராஜன் வனமேவிய காரணத்தை முனிவர்களின் வாயிலாகக் கேட்டுணர்ந்து, பின்பு அவர்களை வணங்கி நாககுமாரன் தன் இருப்பிடம் சென்றான். அங்கே வன ராஜனால் எழுதுக்கப்பெற்ற ஒரு சிலாசாஸனத்தைக்கண்டு முனிவர்கள் தெரிவித்த செய்தியோடு ஒத்திருப்பதையும் அறிந்தான். பின்னர் நாககுமாரன் வியாளனை அழைத்து ஸோமப்ரபனை புண்ட்ரவர்தனபுரம் விட்டு வேறிடம் செல்லச் சொல்'' என்றுகூறி விரைவாக அங்கே அனுப்பி வைத்தான். வியாளனின் மொழி கேட்டுக் கோபமுற்றான் ஸோமப்ரபன். வனராஜன் சாஸனம் மற்றும் லக்ஷ்மீமதி யுடன் நாககுமாரனையும் அங்கே அனுப்ப, அதனைக் கொண்டு நாககுமாரன் ஸோமப்ரபனை விடுவித்து வனராஜனை மீண்டும் அங்கே முடிசூட்டுவித்தான். பின்னர் ஸோமப்ரபன் யமதரமுனிவரை அணுகி தீக்ஷையைப் பெற்றான்.

இத்துடன் உபயபாஷா கவிச்சக்ரவர்த்தி
ஸ்ரீமல்லிஷேணசூரி இயற்றிய நாககுமார காவியம் என்னும்
ஸ்ரீபஞ்சமீ கதையில் மூன்றாம் ஸர்கம் முடிவுற்றது.

நான்காம் சர்கம்

பூவுலகிலேயே பிரசித்திபெற்று விளங்குவது சுப்ரதிஷ்ட்டகம் என்கிற பட்டணமாகும். அதனை ஜயவர்மன் எனபவன் ஆண்டுவந்தான். ஜயவதீ என்பவள் அவனது மனைவி. அந்த தம்பதியருக்கு அச்சேத்யன், அபேத்யன் என்று இரு புதல்வர்கள் உள்ளனர். ஒரு சமயம் பிஹிதாச்ரவர் என்னும் முனிவர் சுப்ரதிஷ்ட்டகத்திற்கு வந்தார். ஜயவர்மனும் தனது புதல்வர்களுடன் சென்று அவரை வணங்கி அறநெறிக்கதைகளையும் செவிமடுத்துப் பின்பு. "இந்த புதல்வர்களிருவரும் ராஜ்யத்தை ஆண்டு மகிழ்ச்சியுடன் வாழ்வார்களா? அல்லது யாருக்காவது அடிமைந் தொழில் புரிவார்களா? என்று எனக்குக் கூறியருளுங்கள்'' எனப் பிஹிதாச்ரவ முனிவரிடம் வேண்டினார். அரசனின் வேண்டுகோளை ஏற்ற முனிவர், "புண்ட்ரவர்தன புரத்திலிருந்து யாரொருவர் ஸோமப்ரபனை வெளியேற்றுவாரோ அவரே இவ்விருவருக்கும் ஸ்வாமி ஆவார். ஆதலால் இவ்விருவருமே அவருக்கு அடிமைத்தொழிலை மேற்கொள்ளுவார்கள்" என்றும் கூறினார். முனிவரின் மொழிகளைக் கேட்ட பிறகு மன்னன் முத்த மகனுக்கு பட்டம் கட்டி தீக்ஷையைப் பெற்றான்.

பின்பொருகால் ஸோமப்ரபனெனும் முனிவர் சுப்பிரதிஷ்ட்டக பட்டணத்திற்கு வந்தார். அவரை அச்சேத்யாऽபேத்யர்கள் இருவரும் சென்று வணங்கி, தாங்கள் தீக்ஷையைப் பெற்றதற்குக் காரணம் யாதென வினவினர். அதற்கு ஸோமப்ரப முனிவரின் அருகிலிருந்த மற்றொரு முனிவர், "முன்பு இவர் புண்ட்ரவர்தன பட்டணத்தின் அதிபதி. நாககுமாரன் என்பவரால்

அங்கிருந்து பலாத்காரமாக அகற்றப்பட்டவர்' என்று தெரிவித்தார். அந்த முனிவர் கூறிய செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தவர்களாய் புண்ட்ரவர்தனபுரத்தை அடைந்து தமது ஸ்வாமியாக நாககுமாரனை ஏற்று, வணங்கிப் பணி செய்து வந்தனர்.

பிறகு நாககுமாரன் அங்கிருந்து கிளம்பி ஜாலந்திகம் என்னும் காட்டினை அடைந்தான். அந்த வனத்தில் விஷவ்ருக்ஷம் எனப்படும் ஓர் ஆலமர நிழலில் அமர்ந்து. அங்கே கிடைக்கும் கனிகளைத் தன்னைச் சேர்ந்தவர்களுடன் உண்டு மகிழ்ந்தான். அப்போழ்து ஸஹஸ்ரபடர் என்றழைக்கப்பெறுபவர்களில் 500 நபர்கள் அவரை வந்து வணங்கி, "தாங்களின் திருவடியிணைகளில் பணிபுரிய வேண்டும் என்ற ஆவலுடன் இந்த ஆலமரத்தைக் காத்து நிற்கிறோம்" என்றும். "ஒரு சமயம் ஜாலந்திகம் என்னும் இந்த காட்டிற்கு முனிவர் (அவதிஞானிகள் — பணிகுமார கதாஸாஹித்யத்தில் ப. எண். 35, 58) ஒருவர் வந்தார். அவர்களிடம் நாங்கள் எங்களுக்கு ஸ்வாமி யார்? என்று கேட்டோம். அதற்கு முனிவர். "இந்த ஜாலந்திக வனத்தில் உள்ள விஷ விருக்ஷத்தின் பழங்களை யாரொருவர் உண்பதற்காகப் பெற்று மகிழ்வாரோ அவரே உங்களது ஸ்வாமி என்றுரைத்தார்" என்றும் கூறினார்.

பின்னர் நாககுமாரன் அங்கிருந்து கிளம்பி அந்தர பட்டணத்தை அடைந்தான். அங்கு ஸிம்மரதன் ஆட்சி செய்ய, தனது நகர்வந்த நாககுமாரனை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். நாககுமாரன் வீட்டிருக்கும் போது ஸிம்மரதனுக்கு ஒருவர் பட்டோலையைக் கொண்டு வந்து சமர்ப்பித்தார்.

அதில் ஸிம்மாதனின் தோழனுக்கு இன்னல் நேர்ந்துள்ளது குறிப்பிட்டிருந்தது. அது எப்படிப்பட்டது எனில். ஸௌராஷ்ட்ர தேசத்தில் கிர்யாதி (கிரி) நகரம் உண்டு. அதனை ஹரிவர்மா என்பவன் ஆண்டு வருகிறான். அவனுடைய மனைவி மிருகலோசனை. அத்தம்பதியரின் புதல்வி குணவதியாவாள். ஸிந்து தேசத்தின மன்னன் சண்டப்ரத்யோதனன் என்பவன் குணவதியை அடைவதற்காக வந்தான். ஆனால் ஹரிவர்மா, குழந்தையாய் குணவதி கர்பத்திலிருந்தது முதல் அவளை நாககுமாரனை யன்றி யாரொருவருக்கும் கொடுப்பனோ! என்றிருக்கிறான். இந்த நேரத்தில் நான் அங்கு சென்றுவரவேண்டியுள்ளது. அதுவரை நீ இங்கு இருக்கவேண்டும்" என்றுகூற, அதைக் கேட்டு நகைத்தவனாய் அவனுடன் நாககுமாரனும் கிரிபுரம் சென்றான்.* அவ்விருவரின் வருகையை அறிந்த சண்டப்ரத்யோதனன் ஜயவிஜயர்களை அவர்களுடன் போரிட அனுப்பினான். அவ்விருவர்களும் ஸஹஸ்ரபடர்களால் பிடிக்கப்பட்டு அவர்களின் தலைவரிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். அதை அறிந்து சினமுற்ற சண்டப்ரத்-யோதனன் வ்யூஹத்ரயம் வகுத்து ஸஹஸ்ரபடர்களுடன் போரிடப் புறப்பட்டான். நாககுமாரனும் போரினைக் குறித்து! ஸூரப்ரவரஸேனைகளுக்கு அச்சேத்யாபேத்யர்களையும், ஸுமதியைக் கொண்ட ஸேனைக்கு வியாளனையும், எதிர்த்துப் போரிடக்கூறி, தானும் சண்டப்ரத்யோதனனை எதிர்த்துப் போரிட்டான், போரில் சண்டப்ரத்யோதனன் உள்பட அவனது ஸேனை முழுதினையும்

---

* கிரிநகர் தன்னைச் சேரக்கேட்டு நன்நகரைச் சென்றான்
அரிவரனெதிர்கொண்டேகயவன் மனை புகுந்திருந்தான்
நா. கு. கா. தமிழ் - 162/112

பிடித்து ஹரிவர்மனுக்கு அனுப்ப, ஹரிவர்மன் அவர்களை சிறையிலடைத்து, தன்னுடைய நகரம் சென்று, குணவதியை அழைத்துவந்து முறைப்படி நாககுமாரனுக்கு மணம் செய்துவைத்தான்.

பிறகு நாககுமாரன் ஊர்ஜயந்த மலையில் இருக்கும் தீர்த்தங்கரரை வணங்கச் சென்றான். வத்ஸம் என்றழைக்கப்பெறும் இந்த தேசத்தில் கௌசாம்பி என்னும் பெயருடைய பட்டணம் ஒன்றுண்டு. அதனை சுபசந்திரன் என்பவன் ஆண்டு வந்தான். அவனது மனைவி சுகாவதி, அந்த தம்பதியருக்கு 1) சுயப்ரபா, 2) சுப்ரபா, 3) கனகப்ரபா, 4) சொர்ணமாலா, 5) நந்தா, 6) பத்மஸ்ரீ 7) நாகதத்தா என்னும் பெயர்களுடன் அழகிய ஏழு புதல்விகள் இருந்தனர்.

ரூப்ய மலையின் தென் வரிசையில் உள்ள ரத்னஸஞ்சய பட்டணத்திலிருந்து மேகவாஹனனால் வெளியேற்றப் பட்டவன் சுகண்டன், மேகவாஹனன் பலாத்காரமாக ரத்ன ஸஞ்சய பட்டணத்தைக் கைப்பற்றியதால் கௌசாம்பி எனப்படும் நகரின் புறத்தில் "அலங்காபுரம்" என்னும் நகரை ஏற்படுத்தி மிகுந்த கர்வங்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான் அவன். பலமுறை சுபசந்திரனின் ஸப்த கன்னிகைகளையும் யாசித்தவனாய், முயற்சி பலனளிக்காமல் இறுதியில் சுகண்டன் சுபசந்திரனைக் கொன்றுவிடுகிறான். சுபசந்திரனின் புதல்வியர் அனைவரும் "தந்தையைக் கொன்ற சுகண்டனுக்கு நாம் மனைவியர் ஆகப் போகிறோம்" என்று கூற, அதைக் கேட்டு சினமடைந்த சுகண்டன் அவர்களைச் சிறையில் அடைத்தான். அவர்களுள் ஏழாமவளான நாகதத்தை

தெய்வானுகூலத்தால் யாருக்கும் தெரியாமல் ஜினாலயத்தை அடைந்தாள்.

குருஜாங்கல பிரதேசத்தில் ஹஸ்திநாகபுரம் என்று ஒரு பட்டணமுண்டு. அதனை அபிசந்திரன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் சுபசந்திரன என்பவனுடைய தம்பி. சுபசந்திரனின் மகள்களில் ஒருவரான நாகதத்தை தனது சிறிய தகப்பனான அபிசந்திரனிடம் சென்று தமக்கு ஏற்பட்ட இன்னல்களைத் தெரிவித்தாள். அதைக்கேட்ட அபிசந்திரன் நாககுமாரனுக்கு ஓர் ஓலையினை எழுதி அனுப்பினான். அந்த ஓலையானது ஊர்ஜயந்தமலையை அடைந்த நாககுமாரனிடம் ஒலை எடுத்துச் செல்பவர்களால் சமர்ப்பிக்கப்பெற்றது. செய்தியறிந்த நாககுமாரன் கிரிபுரம் சென்று, தனது மாமனைக் கேட்டு அங்கிருந்து சுபசந்திரபுரியை அடைந்தான். அபிசந்திரனும் அங்கு வந்து, சுகண்டனுக்கு ஒரு தூதுவனை அனுப்பினான். தூதுவனின் மொழிகளைக்கேட்ட சுகண்டன் கோபத்தோடு "அந்தப் பெண்களை யாரால் விடுவிக்கமுடியும்? கால சர்ப்பத்தால் கட்டுண்ட என்னிடம் போரிட்டு யாரால்தான் வெல்லமுடியும்?" என்று கூறினான்.

அத்தருணம் நாககுமாரன் சுகண்டனுடன் போரிட்டு சந்திரஹாசம் என்ற வாளால் அவனை வெட்டி வீழ்த்தினான். பிறகு அலங்க்யபுரம் சென்ற நாககுமாரனை வஜ்ரகண்டன் வணங்கி நின்றான். அதன் பிறகு இரத்தின ஸஞ்சயபுரம் அடைந்து மேகவாகனனை விரட்டி அங்கே வஜ்ரகண்டனை முடிசூட்டுவித்தான். பிறகு நாககுமாரனால் அபிசந்திர(ன் மகள் மற்றும்) சுபசந்திரர்களின் புதல்வியர் களையும் வஜ்ரகண்டனின் தங்கை ருக்மிணியையும் மணம் புரியப் பெற்றது.

பாண்டிய நாட்டில் மதுரை என்றொரு நகரமுண்டு. அதனை மேகவாகனன் ஆண்டு வந்தான். அவனது மனைவி ஜயலக்ஷ்மி. அவ்விருவரின் புதல்வி ஸ்ரீமதி. தாதியின் மகள் காமலதை. அவள் மிக்க அழகுடன் விளங்குவதால் மன்மதனே வந்தாலும் அவனை விரும்பாள். இவ்வாறான செய்தியைக் கேட்டு மாவியாளன் பாடலிபுத்திரத்திலிருந்து கிளம்பி மதுராபுரியை வந்தடைந்தான்.

[மதுரை மன்னனான மேகவாஹனனின் சகோதரி மகன் காமாங்கன. அவன் வீரத்தில் கோடிக்கணக்கான சிப்பாய்களுககு நிகரானவன். அவன் தன்னுடைய மாமன் மேகவாஹனனிடத்தில் காமலதையைப் பெண்கேட்டு நின்றான். காமாங்கனை மணப்பதில் காமலதைக்கு விருப்பமில்லை. அவள் மாவியாளனைக்காண விழைந்தாள். அத்தருணம் காமலதை காமாங்கனால் பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பெற்றாள். அப்போழ்து அவள் "என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!" என்று கூறினாள். அங்கு வந்துசேர்ந்த மாவியாளனும், "அவளை விடு! அவளை விடு!" என்றும், "நான் உன்னை விடுவிக்கிறேன், நீ விடுதலை அடைவாய்" என்றும் தெரிவித்தான். பின்னர் வாளும் கையுமாகக் காமாங்கனுடன் போரிட்டு போரில் அவனைக் கொன்றுவிடுகிறான். மேகவாஹனனும் காமலதையை மாவியாளனுக்கு அளிக்க, அவ்விருவரும் இன்பமுற்றிருந்தனர்.

குறிப்பு:- இந்தக் கதை புண்யாச்ரவகதாகோசம் இடம்பெற்றுள்ள பணிகுமாரகதா ஸாஹித்யத்தின் — கன்னடம் — பக்க எண். 60 லிருந்து இங்கே இணைக்கப் பெற்றுள்ளது.]

அவன் சாலையில் நடந்து செல்வதைக் கண்டு ஒரு நொடிப்பொழுதில் காமக்கணைகளால் தைக்கலுற்றாள். பிறகு அவனால் வாஞ்சிக்கவும் பெற்று இருவரும் இன்பமுற்றிருந்தனர். அவந்தி எனும் தேசத்தில் உஜ்ஜயினி என்னுமோர் நகருண்டு. அதனை ஜயஸேனன் ஆண்டுவந்தான். அவனது மனைவி ஜெயஸ்ரீ. அந்தத் தம்பதியரின் அழகு புதல்விதான் மேனகி என்பவள். அவள் வாலிபத்தால் விளங்கும் எந்த ஆண்மகனையும் விரும்புவதில்லை. இவ்வாறான செய்தி கேட்டு மாவியாளன் அங்கே சென்றான். கடைத்தெருவில் செல்லுகின்ற சமயம் மேனகியும் அங்கு வந்து, "பலர் கூட்டமாய் அங்கே குழுமியிருக்க காரணம் என்ன?" என்று வினவினாள். அதற்கு அவளுடைய தோழி, "காமவேளுக்கு நிகரான மனிதனைக் கண்டதால் மக்களின் குழு அங்கே காணப்படுகிறது" என்று கூறினாள். மேனகியும் மாவியாளனைக் கண்டு பரிஹாசம் புரிந்தவளாய் வீடு திரும்பினாள். அப்போது, அழகிற் சிறந்த மாவியாளன் தன்னை யாரொருவள் விரும்பமாட்டாளோ அவளது கணவன் தனக்கு ஸ்வாமி என்றுரைத்த யமதாருடைய கூற்றை நினைத்தவனாய் வியாளனாகிய அண்ணனுக்கும் எனக்கும் ஒருவரே ஸ்வாமி ஆகக்கூடும் என்று எண்ணி ஹஸ்திநாகபுரத்திற்கு வந்தான். வந்தவுடன் சகோதரனான வியாளனை வணங்கித் தான் வந்த காரணத்தை விளக்கினான்.

பிறகு நாககுமாரனின் உருவத்தைத் துணியில் வரைந்து எடுத்துச்சென்று மேனகியிடம் காட்ட, அவரது அழகில் மோஹித்துவிட்டாள். பிறகு வியாள-மாவியாளர்கள் இருவரும் நாககுமாரனை வணங்க, வியாளனிடம் நாககுமாரன், "யார் இவர்? எங்கிருந்து வந்துள்ளார்" என்று வினவ, வியாளனும் தங்களது பாதாரவிந்தங்களில் பணியடிமைபுரிய உஜ்ஜயினியிலிருந்து வந்துள்ளார்" என்று

கூறினான். அதைக்கேட்ட நாககுமாரன் மகிழ்ச்சியுற அப்போது மாவியாளனால் மேனகி விருத்தாந்தம் கூறப் பெற்றது. பின்பு நாககுமாரனும் அவந்தி நாட்டு இளவரசியான மேனகியை மணந்தாள்.

மற்றோர் சமயம் நாககுமாரன் மதுரைக்குச் சென்று அங்கு அரசாட்சிபுரியும் மேகவாஹனனின் மனைவி விஜயலக்ஷ்மி மகளான ஸ்ரீமதியின் நாட்டியத்திற்கு மிருதங்கம் வாசித்து அவளை ஆடச்செய்து, அவளது கர்வத்தையும் அடக்கிப் பின் அவளையும் மணம் புரிந்தான். பின்பொரு வடக்கு தேசத்திலிருந்து ஒரு வணிகன் வந்தான், அவனிடம் "உன்னால் அதிசயம் ஏதேனும் காணப்பெற்றதா" என வினவினான் நாககுமாரன். அதற்கு வணிகன் "கடல் சூழ்ந்த பிரதேசமான பூமிதிலகம் எனும் த்விபத்தில் பொன் மயமான ஜினாலயம் ஒன்றுள்ளது. அங்கு மதிய நேரத்தில் 500 கன்னிப்பெண்கள் ஓலமிடுகின்றனர். அதன் காரணம் யாதென்பதை அறிகின்றிலேன்" என்றான். அதைச் செவிமடுத்த நாககுமாரன் வியாளாதியருடன் அந்த இடத்திற்குச் சென்று ஜினதேவரைப் பூசித்து வணங்கினர். அப்போது ஓலமிடுகின்ற பெண்களின் ஒலிகேட்டு அவர்களையும் தானாகவே அழைத்து விசாரித்தான். அதற்கு அவர்களுள் ஒருவராகிய தரணிசுந்தரி "ப்ருத்வீ திலகம் என்னும் பிரதேசத்திலுள்ள திரக்ஷன் என்னும் வித்யாதரனே எங்களது தந்தையாவார். மற்றொருவர் எங்களது தாய்மாமனின் புதல்வன் வாயுவேகன். இந்த வாயுவேகன் என்பவன் எங்களது தந்தையாரிடத்தில் பெண் கேட்டு நின்றான். அழகற்ற அவருக்கு எங்களை அளிப்பதில் எங்களது தந்தையாருக்கு விருப்பமில்லை. ஆகையால் எங்களை அளிக்க மறுத்துவிட்டார். வாயுவேகனோவெனில்; பலநாட்களாக ராக்ஷஸீ வித்யை அதிகரித்து, ஸித்தியையும் பெற்று அதன் உதவியோடு எங்களது தந்தையைப் போரில் கொன்றான். பிறகு

அந்த துஷ்டனால் எங்களை மணக்க திருமண ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அதுசமயம் எங்களது தந்தையை நினைத்து "உன் தலையைக் கொய்தவர் யாரோ அவரே எங்களது கணவன்" என எங்களால் கூறப்பெற்றது. அதற்கு வாயுவேகன், "இன்னும் ஆறு மாத காலம் அவகாசம் தருகிறோம். அதற்குள் யாரை வேண்டு மானாலும் என்னுடன் எதிர்த்துப் போரிடச் செய்யுங்கள்' என்றுகூறி எங்களைச் சிறையிலடைத்துள்ளான்" எனத் தெரிவித்தாள்.

பின்னர் ரக்ஷமகாரக்ஷர் இருவரும் வாயுவேகனின் தேஹரக்ஷகர்களுடன் போரிட்டு அவர்களைக் கொன்று வானத்தில் ஒளித்து வைத்தனர். அந்த விருத்தாந்தத்தைக் கேட்டு வாயுவேகன் சினத்தால் வாயுமார்கத்தில் நின்று போரிட்டான். அவனால் மேகவித்யை பிரயோகிக்கப் பெற்று விடாமழை பொழியப்பெற்றது. அதைக்கண்ட அதைக் கண்ட சுகண்டனின் எதிரியான நாககுமாரன் வாயு வித்யையைப் பிரயோகித்து மழையைக் கலைத்தான். பின்னர் வாயுவேகனும், நாககுமாரனும் அந்தகாரிணீ (இருட்டைத் தருவது)யையும், உத்யோதகாரிணீ (வெளிச்சம் தருவது) யையும், ஜலப்ரவாஹினீ (ஜலப்ரவாஹத்தை ஏற்படுத்தும்) யையும், பாடவானலம் (வடவாக்னீ கடலினுள்ளிருக்கும் அக்னி) போன்ற வித்யைகளை மாறி மாறிப் பிரயோகித்தனர் பின்னர் இருவரும் வித்யா யுத்தம் தவிர்த்து வாட்போரில் இறங்கினர். போரில் நாககுமாரன். வாளால் வாயுவேகனை வெட்டி வீழ்த்தினான். அவனால் சிறையிடப்பெற்ற 500 கன்னிப் பெண்கள் நாககுமாரனால் மணக்கப் பெற்றனர்.

பின்போர் நாளில் நாககுமாரனின் மைத்துனர்களான ரக்ஷமகாரக்ஷர்கள் ப்ருத்வீதிலகத்தின் அரச பொறுப்பை ஏற்றனர். மறுபடியும் ஸஹஸ்ரபடர்கள் என்றழைக்கப்

பெறும் 500 நபர்கள் நாகுமாரனை அணுகி அடிமைப்பணி மேற்கொண்டனர். அவர்களிடம் நீங்கள் இவ்வாறு செய்யக் காரணம் யாதெனக் கேட்டபோது அவர்கள், "எங்களுக்குத் தலைவர் யார் என்று ஒரு முனிவரைக் கேட்டோம். அவர், (வாயுவேகனால் சிறையிடப்பெற்ற) இந்த 500 கன்யைகளுக்கு யார் ஸ்வாமியோ அவரே உங்களுக்குத் தலைவர் ஆவார் என எங்களிடம் மொழிந்தார்" என்பதாகக் கூறினார். பிறகு நாககுமாரன் காஞ்சிபுரம் சென்று, கலிங்கதேசத்திலுள்ள தந்திபுரத்தை அடைந்தான். தந்திபுரத்தை ஆண்ட சந்திரகுப்தன் — சந்திரமதி தம்பதியினரின் புதல்வியான மதனமஞ்சூஷை யையும், கங்காள தேசத்தில் விளங்கும் திரிலோகதிலகம் சென்று அங்கரசாட்சிபுரியும் விஜயந்தரன் — விஜயா தம்பதியினரின் புதல்வியான லக்ஷ்மீமதி என்பவளையும் மணந்தான்.

மல்லிகைப் பூப்போன்ற பற்கள் ஆகியவற்றோடு அழகில் திகழும் அந்த லக்ஷ்மீமதியுடன் சுகமாய்க் காலங்கடத்திவர, அப்போழ்து பிஹிதாஸ்ரவ முனிவர் அங்கு வந்தார். அந்த முனிவரை முறைப்படி வணங்கி, அவரிடம் விரதங்கள் பற்றியதான செய்திகளை கேட்க தமக்கிருக்கும் ஆவலை நாககுமாரன் வெளியிடு கின்றார்.

இத்துடன் உபயபாஷா கவிச்சக்ரவர்த்தி
ஸ்ரீமல்லிஷேணசூரியால் இயற்றப்பெற்ற நாககுமாரபஞ்சமீ
கதையில் நான்காம் ஸர்கம் முற்றுப்பெற்றது.

ஐந்தாம் ஸர்கம்

நாககுமாரன், சென்ற அத்யாயத்தின் இறுதியில் விரதங்களைப்பற்றி அறியவிருக்கும் தமது ஆவலை முனிவரிடம் தெரிவித்தான். அதற்குப் பிஹிதாஸ்ரவ முனிவர், "ஒரு மரத்திற்கு வேரும், மனைக்கு அஸ்திவாரமும் எப்படி முக்கியமோ, அப்படி விரதங்களனைத்திற்கும் "ஸம்யக்த்வம்" என்பது அடிப்படையாகின்றது ஆப்தன், ஆகமம், தத்துவம் ஆகியவைமீது நாம் கொள்ளும் நம்பிக்கையே "ஸம்யக்தவம்" ஆகும். ஆப்தன் என அழைக்கப்பெறுகின்ற ஸ்வாமி தோஷங்களற்றவர். ஆகமம் என்பது திர்த்தங்கரரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மூல நூல்களின் பெயர் ஜீவன் முதலான திரவ்யங்களே தத்துவங்கள். ஆப்தனால் ஆகமம் கூறப் பெற்றது. தத்துவங்கள் அவனால் நினைக்கப்பெற்றன. ஆப்தாகம தத்துவங்களின்மீது நாம் கொள்ளும் நம்பிக்கையாகிற 'ஸம்யக்த்வம்' ஆக்ஞை, அதிகமம் என இருவகைப் படும். மேலும் இல்லறத்தோரின் (சிராவகர்களின்) அறங்களாகச் சமணப் பெரியோர்களால் கள் அருந்தாமை, புலால் உண்ணாமை, தேன் குடியாமை ஆகியவற்றுடன் ஐவகை அனுவிரதங்களும், எட்டு மூல குணங்களும் [அஷ்ட குணங்கள்: 1. ஸம்யக்த்வம், 2. அநந்ததர்சனம், 3. அநந்தஞானம், 4. அநந்தவீர்யம். 5. சூக்ஷ்மத்வம், 6. அவகாஹித்வம் 7. அவ்யாபாதத்வம், 8. அகுருலகுத்வம் என்பன. நாககுமார ஷட்பதியில் - ப. எண், 728] கூறப்பட்டன.

கள் அருந்தாமை :

குடிப்பழக்கம் என்பது தகாத செயல்களில் ஈடுபடுதலுக்கும், அதிக நேரம் உறங்குதலுக்கும், இரக்கமின்றி உயிர்வதை செய்தலுக்கும் காரணமாகின்றது. அறச்

செயல்களுக்கும் அது இடையூறு விளைவிக்கின்றது. ஆதலால் கள் அருந்துவதை அறவே விடுதல் வேண்டும்.

புலால் உண்ணாமை :

மாமிசமானது பிராணிகளை வலுக்கட்டாயமாகக் கொன்று எடுக்கப்படுகின்றது. ஆதலால் புலால் உண்ணு தலைத் தவிர்த்தல் வேண்டும்.

தேன் அருந்தாமை :

தேன் தேனீக்களால் உண்டாக்கப் பெறுகின்றது. தேனைப் பெற நாம் அவற்றைக் கொல்ல வேண்டும். அவ்விதம் செய்து, அந்த அசுத்தமானத் தேனைச் சேகரித்தல் பெரும்பாவச் செயலானதால் அறிஞர்கள் தேனருந்துதலையும் ஒப்பமாட்டார்கள்,

அணுவிரதம் :

அணுவிரதம் ஐந்து வகைப்படும். அவை முறையே அஹிம்சை, பொய்பேசாமை, பிறர் பொருளை விரும்பாமை, பிறர் மனை நயவாமை, தனக்கெனச் சில பொருட்களை வைத்துக்கொண்டு மற்றவற்றை விடுதல் முதலியன. குண விரதத்தையும், சிக்ஷா விரதத்தையும் சேர்த்து சில ஸப்தகம் (எழுவகை ஒழுக்கம்) என்று முனிவர்களால் கூறப்பட்டது. குணவிரதம் என்பது சிராவகர்களின் விரதமாகும். சிக்ஷா விரதம் என்பது முனி ஜீவனத்தின் சிக்ஷணத்தைப் பெற மேற்கொள்ளும் விரதமாகும்.

குணவிரதம் ;

இது மூவகைப்படும். திக்விரதம், தேசவிரதம், அனர்த்த தண்டவிரதம் ஆகியன இதன் முப்பிரிவுகளாகும்.

1. திக்விரதம் : நான் இத்திசையில் குறிப்பிட்ட தொலைவு மட்டும் செல்லப்போகிறேன் என்ற உறுதியை மேற்கொள்ளுவதே திக்விரதமாகும்.

2. தேசவிரதம் : இன்ப துன்பங்களின் இடையிலும் நான் குறிப்பிட்ட அளவு (பூமியை) தேசத்தைக் கடந்து செல்லவிருக்கிறேன் என்ற உறுதியோடு செல்லப்படுவதை தேசவிரதம் என்றழைக்கப்படுகிறது.

3. அனர்த்ததண்ட விரதம் : விஷம் (விஷ ஜந்துக்கள்) நாய், ஆயுதம், அக்னி, பூனை, கிரிப்பிள்ளை இவைகளை வைத்திருப்பதே அனர்த்தம். இவற்றைத் தானமாகக் கொடுக்கக் கூடாது. இதுவே அனர்த்ததண்ட விரதமாகும்.

சிக்ஷாவிரதம் :

இந்த விரதம் மொத்தம் நால்வகைப்படும்.

1. மூவேளைகளிலும் ஜினரை வணங்குதல்.

2. மாதத்தின் நான்கு பருவங்களிலும் உண்ணாநோன்பு இருத்தல்.

3. தாம்பூலதாரணம், உணவு உட்கொள்ளுகை, உறக்கம் ஆகியவற்றில் அளவுடனிருத்தல்.

4. விருந்தினரை உபசரித்துப் பிறகு, தானுண்ணுதல் என்பன.

இதுவரை ஒழுக்கத்தின் எழுவகைகளை விளம்பிய ஆசிரியர், தவிர்க்கப்படவேண்டிய சிலவற்றை மேலும் கூறுகின்றார்.

பஞ்சோதும்பரம்,* அத்தி, ஆல், அரசு, இரளி (கொன்றை), கல்லால்** போன்ற மரங்களிலிருந்து கிடைக்கும் பூ, காய், ஊறுகாய் முதலியவற்றையும், வெண்ணெய்யினையும்,‡ உதிரம், தோல், எலும்பு முதலியவற்றுடன் இருப்பதால் மாமிசத்தையும், இறந்த உடலைப் பார்த்தால் உணவையும், தள்ளுபடி செய்த சோற்றையும் தவிர்க்கவேண்டும். மேலும் உணவு உட்கொள்ளும் வேளையில் மௌனமாய் இருத்தலையும், அறிவு வளர்ச்சிக்காகப் பெரியோர்களிடம் வணக்கமாயிருத்தலையும், நம்பி இருப்போரைக் காத்தலையும் முனிவர்கள் உபதேசித்து உள்ளனர். மேலும், ஹிம்சைக்கு ஒப்பாகும் இரவு

---

* மத்யம் மாம்ஸம் க்ஷௌத்ரம்
பஞ்சோதும்பர பலானி யத்னேன ।
ஹிம்ஸாப்யுபரதிகாமை:
மோக்தவ்யானி பிரதமதேவ ॥

(புருஷார்த்தஸித்யுபாயத்தில்
C. V. No. *2823*, *120/61*)

** பேத்தி (,, ,,)

‡ நவநீதம் ச த்யாஜ்யம், யோனிஸ்தானம்
பிரபூதஜீவானாம்.

(பொ) தயிரைக் கடைந்தெடுத்த வெண்ணெய்யை அப்போதே காய்ச்சி நெய்யாக்குதல் வேண்டும். இல்லையெனில் அந்த வெண்ணெய் இருமுகூர்த்தங்களுக்குப் பிறகு அனந்த ஜீவரூபத்தை அடைந்துவிடும்.

(புருஷார்த்தஸித்யுபாயத்தில்
C. V. No. *2823—216/163*)

போஜனத்தைத் தவிர்த்தல் வேண்டும்.* மத்ய மாம்ஸாதிகளை ஏற்பவர்கள் அடையும் இன்பம் சிறிதளவேயாயினும் அது, நரகம் புகும் துன்பத்தைத் தரவல்லது. அதனால் பல்வேறு இன்னல்களுடன் கூடிய பிறப்பையும் எடுக்க வேண்டிவரும். மத்ய மாம்ஸாதிகளை ஒழிப்பவர்கள் சுவர்க்கமடைந்து அங்கே இன்பமுற்று மகிழ்வர். இம்மையிலும் அவர் சிறந்த புகழ்ச்சியினைப்பெறுவர்'' என்பதாகச் சிராவகர்களின் விரதங்களைப் பற்றிக்கூறி உபதேசத்தினை நிறைவேற்றுகின்றார்.

பிஹிதாச்ரவ முனிவரின் உபதேச மொழிகளைக் கேட்டின்புற்ற நாககுமாரன், ''ஸ்வாமின்! நான் பல பெண்களை மணந்துள்ள நிலையில் எனக்கு லக்ஷ்மீமதியின்மேல் மிகுந்த பற்று ஏற்பட்டுள்ளதே! காரணம் என்ன? என்று கூறவேண்டும்'' என்றான். அதற்கு முனிவர், ''மேருமலையின் வடதிசைப் பகுதியில் உள்ள ஐராவத க்ஷேத்திரத்தில் வீதசோகபுரம் என்ற நகரொன்றுண்டு அதனை மகேந்திர விக்கிரமன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அங்கு தனதத்தன் என்றொரு வைசியன் இருந்தான். தனதத்தனின் மனைவி தனஸ்ரீ. அந்த வைச்ய தம்பதியருக்கு நாகதத்தன் என்றொரு புதல்வனிருந்தான். அதே ஊரில் வசுதத்தன் வசுமதீ என்போர் வாழ்ந்துவர, அவர்களுக்கு நாகவசு

---

* ராத்ரௌ புஞ்ஜானானாம்
யஸ்மாதநிவாரிதா பவதி ஹிம்ஸாம் ।
ஹிம்ஸாऽவிரதைஸ்ததா
த்யக்தவ்யா ராத்ரிபுக்திரபி ॥

(புருஷார்த்த ஸித்யுபாயத்தில்
C. V. No. 2823 -- 181/129)

என்றொரு புதல்வி இருந்தாள். காலப்போக்கில் நாக தத்தனும், நாகவசுவும் முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்களாய் இல்லறவாழ்க்கை இனிதே நடத்திச் செல்லுகின்றனர்.

அந்தருணம் முனிகுப்தர் எனும் முனிவர் விதசோக புரத்திற்கு வந்தார். நாகதத்தனும் அந்த முனிவரை வணங்கி, அறநெறிச் செய்திகளைக் கேட்டு, பஞ்சமி நாளான அன்றிரவு உண்ணா நோன்பிருந்தான். "காலை நேரமாகியதால் உடன் எழுந்திருந்து ஜினரை வணங்கி உணவு கொண்டிடப் புறப்படுவாயாக" என்று அவனது பெற்றோர்கள் கூறினர். நாகதத்தனோவெனில்; ஆதவன் உதயமாகி. பொழுது புலருவதைத் தானே அறிய வீட்டின் சுவற்றில் சிறிய சில துவாரங்களைச் செய்து அவற்றில் கண்ணாடியைப் பதித்திருந்தவனாய்ப் பெற்றோர்களின் வினாவிற்கு "பொழுது எப்போது விடியுமென்று எனக்குத் தெரியும்'' என்று கூறி பார்வையை மூக்கு நுனியில் செலுத்தி, மத்தகத்திடை கைகளைக் கூப்பி மனதில் ஜினரை தியானித்தான். அந்நிலையில் இருக்கும்போது ஆவி அவனது உடலிலிருந்து அகன்றது. "சூர்யப்ரபை" என்ற விமானம் அத்தருணத்தில் கீழிறங்கிவர, அதிலேறி, 'சூரியப்ரபன்' என்ற பெயருடன் (விண்ணுலகம்) சுவர்க்கம் புகுந்தான். ஐந்து பல்ல* காலம் ஸௌதர்மம் என்ற சுவர்க்கத்தில் இன்பம் உற்றவனாய்ப் பிறகு நீ மண்ணுலகில் மானிடப்பிறப்பெடுத்தாய். சுவர்க்கத்திலிருந்து இறங்கிய நீ ஜயந்தரமகிபதியின் மகனாய்த் தோன்றி 'பிரதாபந்தரன்'

---

* பல்லம் — ஜைன சாஸ்திரங்களில் கூறப்பட்ட ஒரு ஆயுஷ்ய பிரமாணம்.

— நாககுமார ஷட்பதியில் பக்க எண். 735.

என்று அழைக்கப்படுகின்றாய். உன்னைப்போலவே நாகவசுவும் தவம் புரிந்து, சுவர்க்கமெய்தித் தற்போது விஜயந்திரன் புதல்வியாய்த் தோன்றி, உன்னைக் கணவனாக அடைந்திருக்கின்றாள். ஆதலால் கடைசி மனைவியான லக்ஷ்மிமதியினிடத்தில் இத்தகைய பற்று ஏற்பட்டிருக்கிறது'' என்று கூறினார். நாககுமாரன், தனக்கும் லக்ஷ்மிமதிக்குமுள்ள மிகுந்த பற்றுக்குக் காரண மறிந்து மகிழ்ந்தவனாய் மீண்டும் அம்முனிவரிடம் ''பஞ்சமி விரதம் பற்றி கூறியருளுங்கள்'' என்று வேண்டினான்.

நாககுமாரனின் மற்றோர் ஆவலைக்கேட்ட முனிவர், ''கார்த்திகம், ஆஷாடம், பால்குனம் ஆகிய மாதங்களில் சுக்கிலபக்ஷத்து (சுக்லபக்ஷம் — அமாவாஸைக்குப் பிறகு தொடங்குகின்றது) பஞ்சமி திதியில் (ஐந்தாம் நாளில்) இந்த பஞ்சமீ விரதத்தை மேற்கொள்ளவேண்டும். இதனை மேற்கொள்ளும் முதல் நாளான சதுர்த்தி திதியன்று நீராடி முறைப்படி உண்டு, ஜினாலயத்தில் ஸாதுக்களின் அருகில் மனது, வாக்கு, காயங்களான த்ரிகரணசுத்தியோடு இந்த விரதத்தைத் தொடங்கவேண்டும். நோன்புச் சமயத்தில் நீராட்டம், வாசனைத் திரவியங்களின் பூச்சு, அணிகலன், வீட்டு வேலைகள், கட்டிலில் படுத்தல், உறக்கம் ஆகிய வற்றைத் தவிர்த்து மனத்தூய்மையுடன் நோன்பு நோற்று, மறுநாள் விரதோத்யாபனம் செய்து, பின்னர், தான் உணவு உட்கொள்ளவேண்டும். இந்த ஸ்ரீபஞ்சமீ விரதத்தினை 5 வருடங்களோ, 5 மாதங்களோ, அதற்கு மேலான கால அளவிலோ வேறெதிலும் பற்றில்லாதவராய் அனுஷ்டித்தல் வேண்டும். விரதம் முடிந்து உத்யாபனம் செய்யாதுபோனால் மேலும் இருமடங்கு உண்ணாநோன்பு மேற்கொள்ள வேண்டுமாகும். உத்யாபனத்தின்போது

மணி, தீபம், பிரதிமை, கொடி ஆகியவற்றைச் செய்து ஜினபுங்கவர்களைப் பூசித்தல் வேண்டும். மேலும் [ஐந்து ஸ்ரீபஞ்சமீ விரத புத்தகங்களை எழுதுவிக்கப்பெற்று, டவணெகோல், கவளிகே, ச்ருதபாவடெ ஆகியவற்றுடன்– ஸ்ரீ பஞ்சமீ நோன்புக்கதை – பணிகுமாரகதாஸாஹித்தியத்தில், பக்க எண். 40] புத்தகங்களைக் கபளீயந்த்ரத்துடன் ஐந்து ஸாதுக்களுக்குத் தானமாக வழங்கவேண்டும். மற்ற எல்லா ஸாதுக்களுக்கும் புஸ்தகம், ஔஷதம் முதலானவற்றைத் தானமாகக் கொடுக்கவேண்டும். சிராவகியர்களுக்கும், யாசகர்களுக்கும் தனது சக்திக்கேற்றவாறு வஸ்த்ரம், சொர்ணம், ஆஹாரம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். இவ்வாறாக விரதங்கள், உபவாஸ முறைகள் பற்றி அறிந்து மகிழ்ந்த நாககுமாரன், தன் இருப்பிடம் சென்று, லக்ஷ்மிமதியுடன் இன்பமாய் இல்லறம் மேற்கொண்டுவந்தான்.

அப்போழ்து ஜயந்தரன் தனது அமைச்சரான நயந்தரனை நாககுமாரனிடம் அனுப்பினான். நயந்தரனும் நாககுமாரனை அடைந்து, "தாங்களை விரைவாக அழைத்து வரச்சொல்லி என்னைத் தாங்களிடம் அனுப்பியுள்ளார் ஜயந்தர மன்னர். ஆதலால் விரைவாய்ப் புறப்படுங்கள்" என்றார். நயந்தரன் கூறுவதைக் கேட்ட நாககுமாரன் தன் மாமனாரிடத்தில் கூறிவிட்டு நவவதூவுடன் கனகபுரத்திற்குப் புறப்பட்டான். நாககுமாரன் கனகபுரம் வரும் செய்தியைக் கேட்டு ஸ்ரீதரனும், விசாலநேத்திரையும் தவம் ஏற்கச்சென்றனர், கனகபுரம் செல்ல நாககுமாரனின் கட்டளையின் பேரில் விகுர்வாணை என்னும் வித்யாதரனால் சதுரங்க ஸேனை ஒரு யோசனை நீளத்தில் அமைக்கப் பெற்றது. நாககுமாரனும் வியாளன், அச்சேத்யன், அபேத்யன் முதலானவர் புடைசூழ நீலகிரி

யானைமீதேறி கனகபுரம் சென்றான். பாதிவழி வந்து காத்திருந்த பெற்றோர்களை நாககுமாரன் வணங்க, அவனது பெற்றோர் அவனை மார்புறத் தழுவி மகிழ்ந்தனர்,

பின்பு, நாககுமாரன் மணந்த பெண்களின் வீட்டார் அனைவரும் அழைக்கப்பட்டனர். இப்படியாக மகிழ்ச்சி யாய்க் காலங்கடத்தினான் நாககுமாரன். ஒருநாள் ஜயந்தரனும் தன்னுருவத்தைக் கண்ணாடியில் பார்த்துத் தலைமயிர் நரை விழுந்தது கண்டு, ஸம்ஸாரத்தில் விரக்தி ஏற்பட்டு புதல்வன் நாககுமாரனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, பிஹிதாஸ்வர முனிவரிடம் தீக்ஷை பெற்றான். அஷ்டகர்மங்களையும்* முடித்த அவன் முக்தி யையும் பெற்றான். நாககுமாரனின் தாய் பிருத்விதேவி ஸ்ரீமத்யச்சிகையிடம் தீக்ஷைபெற்றாள்.

நாககுமாரனும் தன்னுடைய தேசத்தின் பாதியளவை வியாளனுக்கும், கோசலாகிரமாளவப் பிரதேசங்களை அச்சேத்யாபேத்யர்களுக்கும், கௌடவைதர்ப மண்டலங் களை மாவியாளனுக்கும், கிழக்குத் தேசததை ஸஹஸ்ர படருக்கும், மற்றும் பலருக்குப் பக்த கிராமங்களையும் அளித்து மகிழ்ந்தான்.

பிறகு தனது மனைவியருள் லக்ஷ்மீமதி, தாரணிசுந்தரி, நந்தன் மகள், ஹரிவர்மனின் புதல்வி ஆகிய நால்வரைப் பட்டமஹிஷியாக்கினான்.

---

* காதிகர்மங்கள் நான்கினையும், அகாதிகர்மங்கள் நான்கினையும் சேர்த்து அஷ்டகர்மங்கள்.

நாககுமார ஷட்பதி. ப - 730

பின்னர் சிறந்த முறையில் 8000 அரசர்கள் புடைசூழ அரசினை ஆண்டு வந்தான். அப்படியிருக்க ஓர் நாள் ஏழு மாடிக் கட்டடத்தில் இருந்தவனாய் இயற்கையை ரசித்து, அதில் மாறுதலையும் உணர்ந்து, அதுபோல உலக வாழ்க்கை நிலையற்றதென்றெண்ணி தனக்கும் லக்ஷ்மிமதிக்கும் பிறந்த தேவகுமாரனுக்கு முடிசூட்டி, அமலமதி என்னும் முனிவரிடம் தீக்ஷை பெற்றான், லக்ஷ்மிமதி முதலான நாககுமாரன் மனைவியர்கள் போகம் துறந்து தவம் ஏற்கலாயினர். வியாளன், மாவியாளன், அச்சேத்யன், அபேத்யன் ஆகியோர் நிலையான மோக்ஷத்தைப் பெற்றனர், ஸஹஸ்ரபடர்களும் மற்றும் பலரும் அவரவர்களுடைய தவத்திற்கேற்ற பயனை அடைந்தனர்.

இந்த காவியத்தின் நாயகனான நாககுமாரனின் ஆயுட்காலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.	அரசாட்சி புரிந்த காலம்	800
2.	குமாரனாக	70
3.	தவத்தோனாக	64
4.	கேவல ஞானியாக	66
	நாககுமாரனின் மொத்த ஆயுட்காலம்	1000

இத்துடன் ஸ்ரீ கௌதமரினால் சொல்லப்பட்ட நாககுமார சரிதம், பவ்யர்களுக்கு இன்பம் அளிப்பதாயும், ஸம்ஸாரப்பிணியை அகற்றுவதாயும், நற்கதியருள்வதாயும் விளங்குகின்றது. இந்த கதைதனைக் கேட்ட மகதாதி

பனான சிரேணிகன் தன் குழுவோடு பரமபக்தியுடன் வணங்கிப்பின் விபுலாசலத்திலிருந்து ராஜக்ருஹத்தை அடைந்து, இந்திரனுக்கு ஒப்பாக ராஜ்யபரிபாலனம் செய்தான்'' என்று கூறியவராய் மல்லிஷேணர் இந்த அத்யாயத்தை நிறைவேற்றி, இக்காவியத்தினையும் இனிது முடிக்கின்றார்.

இத்துடன் உபயபாஷா கவிச்சக்ரவர்த்தி
ஸ்ரீமல்லிஷேணசூரியால் இயற்றப்பெற்ற நாககுமார
பஞ்சமீ கதையில் ஐந்தாம் சர்கம் முற்றுபெற்றது.

॥ श्लोकानुक्रमणिका ॥

துணைநூற்பட்டியல்

1. திரு. சந்தானம், V. அவர்கள்
நாககுமாரகாவியம் — 1994
மூலமும் — தமிழ் விளக்க உரையும்,
நந்தனார் பதிப்பகம்,
சிதம்பரம்.

2. திரு. ஞானமூர்த்தி. தா. ஏ. அவர்கள்
சமணம் — 1977
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

3. திரு. துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை.
யசோதர காவியம் — 1970
கழக வெளியீடு.

4. Sri. Naagaraajayya, Hampa.
Phani Kumarkatha Sahitya — 1977
(Kannada)
Chandra Sagaravarni,
Granthmale. Bangalore.

5. Sri. Naagaraajayya, Hampa.
Nagakumara Shatpadi — 1977
(Kannada - Poetry)
Bangalore University
(Centre of Kannada Studies — No. 277)
Bangalore.

6. Sri Sesha Iyengar, H. Pandit
Jivasambodhanam (Kannada) — 1985
(K. 67. T. M. S. S. M. L. Thanjavur)
Government Oriental Manuscript Library,
Chennai.

(SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR)